முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.53/2020 DW: 3 27.07.2026**

2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 27 நாள் பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியாகிய பாக்கியராஜ் என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாக்கியராஜ் | வயது | |
| த/பெயர் | வேதமாணிக்கம் | தொழில் | |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | ஆக்கனூர் |
| மாவட்டம் | கடலூர் | | |

## <u>குறுக்கு விசாரணை</u>

வழக்கின் விபரம் எனக்கு தெரியும். வழக்கு சொத்திற்கான புல எண் என்வென்றால் புல எண்.36, அதன் விஸ்தீரணம் 62 செண்ட். வழக்குச் சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் எதுவுமில்லை, நான் அதன் வழியாக எனது சொத்திற்கு செல்வேன். எனது வீடு எங்கு உள்ளது என்றால் வழக்கு சொத்திலிருந்து கிழக்கில் உள்ளது. பிரதிவாதி தாக்கல் செய்த ஆவணங்களில் நான் சாட்சி கையெப்பம் போட்டுள்ளேனா என்றால் இல்லை.

எதிர்வாதி ராமசாமி எனது ஊர்காரர். நான் சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை கிடைக்கப்பெற்றதா என்றால் இல்லை. நான் என் பிரமாண வாக்குமூலத்தில் வடக்கில் தார் சாலை உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றும் எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் புல வரைபடத்தில் உள்ளது. ஆனால் புல வரைபடத்தில் அவ்வாறு குறிப்பிடவில்லை. எனக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் பிரதிவாதி எனது ஊர்காரர் என்பதால் நான் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI
Digitally signed by N SHALINI
Date: 2026.07.27 17:26:42 +0530

Principal District Munsif,(F.A.C),
Tittagudi.